# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


இளஞ்செடி கோணலாக வளருமானால் நேராக்குவதற்குப் போதிய அவகாசம் வேண்டும், வன்முறையை உபயோகித்தால் செடி ஒடிந்து போய்விடும். பாலருக்குக் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளுவாராகில் தின்மையன்றி நன்மையே கிடையாது.

— ஓர் அறிஞர்


96-ம் புத். | 1971-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 4-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 32-ம் இல


## கிழக்கு பாக்கிஸ்தான் நிலைமையில் நியூசிலாந்து ஆயர்மாரின் கவலை

நியூசிலாந்துதேச ஆயர்மார் கிழக்குப் பாக்கிஸ்தான் நிலைமைபற்றித் தமது ஆழ்ந்தகவலையைத் தெரிவித்திருக்கின்றனர். தமதுதேச அரசாங்கம் ஏற்கனவே இது விஷயமாகக் கையாண்ட முறைகளை அவர்கள் பாராட்டி, மேலும் பாக்கிஸ்தான் அரசாங்கத்துடன் அவர்கள் பரிந்துபேசி, மேற்கு வங்காளத்தில்நடந்துவரும் அட்டூழியங்களை உடனடியாக நிறுத்தத் தகுந்த முறைகளை எடுக்குமாறு தூண்டியிருக்கின்றனர்.

## இந்தியாவுக்கும் பாப்பரசரின் புதிய ஸ்தானிகர்

சென்றவாரம் இலங்கையருக்குப் பாப்பரசரின் புதிய ஸ்தானிகரின் நியமனசெய்தி அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாரம் இந்தியாவுக்கும் பாப்பரசரின் புதிய ஸ்தானிகராக அதிவண. அதிமேற்றிராணியார் ஜோண் கோடன் அடிகளார் நியமிக்கப் பட்டிருக்கிறார் என்னும் செய்தி கிடைத்திருக்கின்றது.

## பாப்பரசர் மெதடிஸ்ற் சபையினருக்கு நன்றி கூறுகின்றார்

பாப்பரசரின் அரசகருமகாரியதரிசியாகிய கருதினால் விலோ அடிகளார் ஐக்கிய அமெரிக்கதேச மெதடிஸ்ற் சபை அதிகாரிகள் அண்மையில் தமது பழைய சில சாசனங்களில் கத்தோலிக்க சமய கொள்கைகளுக்கு எதிராக இருந்த சில ஷரத்துகளை அகற்றினதற்காகப் பரிசுத்த தந்தையின் நன்றியைத் தெரிவித்திருக்கின்றார். "கிறீஸ்தவ சபைகளின் ஒற்றுமையை வளர்க்க மெதடிஸ்ற் சபையினர் கொண்டுள்ள ஆர்வம் இச்செயலினால் புலனாகின்றது" எனத் தமது நன்றிச் செய்தியில் கருதினாலவர்கள் கூறியிருக்கின்றார்.

### துணைஆயர் கோமிஸ் அடிகளாரின் தாயார் காலமானார்

கொழும்பு அதிமேற்றிராசன துணைஆயர்களில் ஒருவராகிய வண. ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளாரின் தாயார் திருமதி பிளொறின்டா கோமிஸ் அம்மையார் அண்மையில் காலமானார். மரணத்துக்குமுன் ஒருசில தினங்களே அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். கருதினால் கூறே உட்பட பலமேற்றிராணிமார் குருமார், இனசனர், சிநேகிதர் இவரது பிரேத அடக்கத்தில் பங்குகொண்டனர்.

## லூர்துபதியில் மீண்டும் ஒரு புதுமை

இத்தாலிய தேசத்துக்குச் சேர்ந்த பிலிப்போ என்பவர் 1966-ம் ஆண்டு தொடக்கம் நடக்கமுடியாதிருந்து, லூர்து கெபியில் சிலவாரங்களின் முன் அங்குள்ள புனித தடாகத்தில் உடம்பு நனைக்கப்பட்டதின்பின் திடீரெனச் சொஸ்தமடைந்த அற்புதத்தை சிலதினங்களின்முன் "காவலன்" நேயர்களுக்கு அறிவித்திருந்தது. அதன்பின், மேலும் ஓர் அற்புத செய்தி எட்டியிருக்கின்றது. ஸ்கொத்திலாந்து தேசத்துக்குச் சேர்ந்த பிறுன்செஸ் பேர்ண்ஸ் என்னும் ஆறுவயது நிரம்பிய சிறுமி மாற்றமுடியாத புற்றுநோயால் பலவருட காலமாகப் பீடிக்கப்பட்டிருந்தாள். மூன்று வருடங்களுக்கு முன்பே வைத்தியர் அவளது வியாதியைக் குணப்படுத்த முடியாதெனக் கூறிவிட்டார். அவளது தாயாரோ மனந்தளராது வளரிய லூர்துமாதாவே தஞ்சமென நம்பி, அங்கு அவளைக் கூட்டிச்சென்று செபித்து, தடாகத்தில் நனைத்து வீடு திரும்பிய சிலநாட்களில் சிறுமி பூரண சுகமடைந்து விட்டாள். அவள் குணமடைந்த தன்மை தற்காலத்து வைத்தியகலையின் அறிவுக்கு அப்பாற்பட்டதென லூர்துகெபி வைத்தியரும், ஸ்கொத்திலாந்து வைத்தியரும் கூறிவிட்டனர்.

## தெரேசா தாயார்சபை ஐந்து கன்னியர்களும் இலங்கையை விட்டுப் பிரிந்தனர்

வடகொழும்புப் பகுதியிலுள்ள வறியோர் சேரிகளில் தொண்டுசெய்துவந்த உலகப் புகழ்பெற்ற தெரேசா தாயார் சபைக் கன்னியர் ஐவரும் தாங்கள் செய்துவந்த சேவையைக் கைவிட்டு இலங்கையிலிருந்து பிரிந்து போகவேண்டிய கவலையான நிலைமை ஏற்பட்டு விட்டது. இதற்குக் காரணம் அவர்கள் மேலும் இந்நாட்டில் தங்கியிருக்க அவசியமான அரசாங்க அனுமதி அவர்களில் மூவருக்குக்கிடையாமற் போனதே. இவர்கள் இதுகாறும் செய்துவந்த சேவையைத்தொடர்ந்து செய்துவர இந்நாட்டுச் சிலபுண்ணிய சீமாட்டிகள் முனைவந்துள்ளது இக்கவலையில் சற்றே ஆறுதல்.

## இதுவும் ஒரு பகிடியா?

இரு வாரங்களின்முன் ஐக்கியஅமெரிக்கதேச நியூயோக் நகரின் மகாதேவாலயமாகிய புனித பத்திரிசியார் தேவாலயத்தில் ஒரு பிரதான வைபவத்தின்முன் அங்கு வந்து கூடிய யாவரையும் கோவிலுக்கு அப்புறப்படுத்தி, தேவாலயம் முழுவதையும் நகரபொலிசார் ஏதேனும் வெடிகுண்டுகள் அங்கு இடப்பட்டனவோ என அறியும்பொருட்டுத் தேடிப் பார்த்தனர். காரணம், அவர்களுக்குத் தொலைபேசி மூலம் யாரோ அக்கோவிலைத் தகர்த்தெறிய வெடிகுண்டுகள் வைத்துச் சென்றனர் என்று கொடுக்கப்பட்ட செய்தியே. சோதனையின் பின் வைபவம் சிறப்பாக நடந்தேறியது. குண்டுகள் ஏதேனும் அங்கு இடப்படவில்லை. இதுவும் ஒரு பகிடியா?

### யெருசலேமிலுள்ள தேவாலயங்கள்பற்றி இஸ்ரயேல் அரசாங்க அறிக்கை

யெருசலேமிலுள்ள கிறீஸ்தவ தேவாலயங்களையும், முஸ்லீம் மக்களின் தேவாலயங்களையும் சர்வதேச கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் பூரண சுதந்திரத்துடன் பரிபாலித்துவர இஸ்ரயேல் அரசாங்கம் சம்மதம் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. ஆனால், யெருசலேம் நகரம் முழுவதையும் அத்தகைய சர்வதேச கட்டுப்பாட்டின்கீழ் விட்டுவிடுவதற்கு அவர்கள் எதிர்க்கின்றனர். கிறீஸ்தவ முஸ்லீம் தேவாலயங்கள் சர்வதேச கட்டுப்பாட்டுத் திட்டத்தை விரும்புவதாயின் அதற்கு விண்ணப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கின்றன.

## கம்யூனிஸ்த யூகோசிலாவியாவிலும் ஒரு லூர்துபதி மகோற்சவம்

சென்ற ஆவணிமாதம் 15-ம் தேதி கம்யூனிஸ்த யூகோசிலாவியாவின் ஒருபகுதியாகிய குரோசியாப் பிரதேசத்திலுள்ள லூர்துபதித் தேவாலயத்தில் பலவருடங்களாகக் கண்டிராத அலங்கார சிறப்புகளுடன் தேவதாயாரின் ஆரோபண வைபவம் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்துக்குமுன் இருவாரங்களாக யூகோசிலேவிய நகரமாகிய சாகிறப்நகரிலே பலகிறிஸ்தவசமய மறைவல்லுனர்பலர் ஒன்றுகூடி கி. பி. 6ஆம் நூற்றூண்டு தொடக்கம் 11-ம் நூற்றூண்டுவரையும் நிலவிய தேவதாயாரின் வணக்கத்தை அலசி ஆராய்ந்தனர். இம்மகாநாட்டின் பின் கத்தோலிக்கரும், பிறருமாகப் பல்லாயிரக் கணக்கானோர் குரோசியாப் பிரதேச லூர்துபதிக்குத் திருயாத்திரைசெய்தனர். நூற்றுக்கணக்கான வியாதிஸ்தர்கள் அங்குகொண்டு செல்லப்பட்டு தேவதாயாரின் திருஅருளை எதிர்பார்த்து நின்றனர். பரிசுத்த தந்தை அன்று அங்கு கூடிய மக்கள் யாவரையும் ஆசீர்வதித்து ஒரு விசேஷ [illegible]செய்தி அனுப்பியிருந்தனர்.

## பாப்பரசரும் ருஷிய பிரிவினைச் சபை புதிய பத்திரியாக்கும்

கத்தோலிக்க திருச்சபைக்கும், ருஷிய பிரிவினைக் கிறிஸ்தத்திருச்சபைகளுக்குமிடையே ஐக்கியத்தை விருத்தி செய்வதற்கு உதவக் கூடிய சகலத்தையும் செய்யத் தாம் ஆயத்தமாயிருப்பதாக ருஷிய பிரிவினை கிறிஸ்த திருச்சபையின் புதிய பத்திரியாக்குவுக்குப் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்திருக்கின்றார்.

புதிய பத்திரியாக்குவான பிமென் ஆண்டகை அண்மையில் திருமுடிசூடியபோது அவருக்கு அனுப்பிய சோபனவாழ்த்துத் தந்தியிலே, "ஒத்துழைப்பிலும், கத்தோலிக்க திருச்சபைக்கும், பிரிவினைத் திருச்சபைக்கும், மற்றும் சகல கிறிஸ்தவர்களுக்குமிடையே ஐக்கியத்தை அபிவிருத்தி செய்ய எதையும் செய்வதிலும் ஆசையுள்ள ஒரு சகோதரனைத் தாங்கள் எம்மில் கண்டு கொள்வீர்கள்" எனப் பாப்பரசர் அறிவித்தார். திருமுடிசூடிய வைபவத்தின்போது, கிறிஸ்த ஐக்கிய செயலகத்தின் தலைவரான கருதினால் விலெபிறான்ட்ஸ் ஆண்டகை பாப்பரசரின் பிரதிநிதியாகச் சமுகமளித்திருந்தார்.

### யேசுசபைத் தலைவர் மொஸ்கோ செல்கிறார்

தற்போது யேசுசபைத் தலைவராயிருக்கிற அதிவண. பேதுரு அருப்பே அடிகளார் இவ்வாரம் ருஷியதேச தலைநகரமாகிய மொஸ்கோவுக்குச் செல்ல இருக்கிறாரென்றும், சோவியத்ருஷியாவிலே நாலு நாட்கள் தங்கியிருந்தபின்னர் வேறு பிரதேசங்களுக்குச் செல்ல இருக்கிறாரென்றும் அறிகின்றோம். யேசுசபைத் தலைவர் ஒருவர் 20ஆம் நூற்றாண்டிலே ருஷியாவுக்கு விஜயஞ்செய்வது இதுவே முதல் முறையாகும்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

# இளைஞர் உலகு

**அன்புச் சோதரரே!**

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகி விட்டன. இது பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் தவணை. எனவே முயற்சியைக் கைவிடாது முயலுங்கள். இன்னும் சில தினங்களில் மரியன்னையின் பிறந்த நாளைக் கொண்டாட விருக்கிறோம். அன்னையின் பிறந்த நாளைக் கொண்டாட அவருக்கு உகந்த பரிசு அளிக்க வேண்டுமல்லவா? எம் இதயத்தில் அவரின் மகனை வரவேற்பதே மிகப் பெரிய பரிசாகும். இதே நாளில் எம்மைப் பெற்று வளர்க்கும் அன்னையரையும் நாம் மறந்து விடக்கூடாது.

இன்னும் ஒரு மாதகாலத்தில் 9-10-71 இளைஞர் உலகு தனது 1-ம் ஆண்டு விழாவைக் கண்டுகளிக்க விருக்கிறது. எனவே, ஆண்டு விழாவைச் சிறப்பிக்க கதை, கட்டுரை, கவிதை போன்ற விடயங்களை நேரகாலத்துடன் அனுப்பி வையுங்கள். எமக்குக் கிடைக்கும், விடயதானங்கள் பலவும் காலா காலத்தில் இப்பகுதியில் இடம் பெறும். 2-ம் ஆண்டில் பிரவேசிக்கும் இளைஞர் உலகு மேலும் பல புதிய அம்சங்களைத் தாங்கி வரும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்.

சோதரன்.

# அன்னை என்பவள் நீதானா?

முதற் பெண் ஏவை செய்த பாவத்தால் பாருலகு காரிருளால் நிறைந்தது. மனுக்குலத்தை சாபக்கேடு ஒன்று சூழ்ந்தது. பெண்ணால் அழிவு நிலைக்குள்ளான அவனி பெண்ணாலே பெருமையடைய வேண்டுமெனச் சித்தங் கொண்டார் தேவன்.

பாவையைப் பாவத்தில் விழுத்திய பாம்புக்கு ஒரு சாபம். "உனக்கும் ஸ்திரிக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசிப்பாள்." அந்த மங்கை தோன்றினாள். யுவக்கீன் அன்னாள் தம்பதிகள் பெற்றெடுத்தனர். அவனியின் அன்னை தோன்றினாள். உலக மீட்பராம் யேசுவின் அன்னை அவனியில் உதித்தாள். மனுக்குல மீட்பின் உடனிரட்சகியான அன்னை.

அண்டி வந்தோரைக் கருணைக் கண்கொண்டு நோக்கும் அன்னை. அம்மா என்றழைத்தால் அபயமளிக்கும் அன்னை. அவனிக்கே பல முறைவந்த அன்னை. பல பெயர் கொண்டு பக்தர்களால் போற்றப்படும் அன்னை. அகிலமே அன்னை என்று அன்பொழுகப் போற்றும் அன்னை. கல்வாரிக் குன்றிலே தன்னையே எமக்கன்னையாகத் தந்த அன்னை. அவனிக்கே அன்னையாய் தன்னையே அளித்த அன்னை இருக்கையில் அச்சமேன்? உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை.

அவள் வழி சென்றால் திரிந்தலையோம். அவள் பாதுகாத்தால் பயம் கொள்ளோம். அவள் தாங்கினால் சாய்ந்து விழோம். நீ எமது சனத்தின் பெருமை. அன்னை என்பவள் நீ தானா? அகிலம் காக்கும் அன்னை. எம்மைப் பெற்ற அன்னையிலும் மேலான அன்னை. எம்மையே அளித்தோம் அன்னையே காப்பாய். மரிதாயே மகளிர் எமக்கே புரிவாயே அருள் நிதமே.

திராட்சையூரான்.

## மகளிர் மட்டும்:

# அரிவையர் அரங்கம்

பெண்கள் சமுதாயத்தின் நடை, உடை பாவனை, அவர்களின் போக்கு என்பனவற்றை இன்றைய மக்களும், பத்திரிகைகளும் போற்றியும் தூற்றியும் வருகின்றன. நங்கையரே! இவை பற்றிய உங்கள் அபிப்பிராயங்களைச் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். இளைஞர் உலகில் இவ் விடயங்கள் இடம் பெறும்.

**முகவரி:**

'இளைஞர் உலகு'
காவலன் அலுவலகம்,
மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# வாழ்க்கை வளம்பெற

எதனையும் உண்மைக்காக இழக்கலாம், ஆனால், எதற்காகவும் உண்மையை இழக்கக் கூடாது.

யாரொருவர் தன்னைப்பற்றி மிதமிஞ்சி நினைத்துக் கொள்கிறாரோ, அவர் வீழ்ச்சிக்கு அந்த நினைப்பே காரணமாக அமைகிறது.

அறிவு பெறயார் நினைக்கிறார்களோ அவர்கள், படிக்க வேண்டிய அரிச்சுவடு, "நாம் அறிவிலிகள்" என்பது தான்.

செயலில் இறங்குமுன் சிந்தனை செய், செயலில் இறங்கியபின் தன்னடக்கம் கொள்.

நீ எதை நம்பினாலும் பரவாயில்லை, ஆனால், அதில் உண்மை இருக்கவேண்டும் என்பதை மட்டும் மறவாதே.

தொகுப்பு:

**இ. டொன்பொஸ்கோ**
செட்டிகுளம்.

# "அமுதபொற் தினமே அன்னையின் பிறந்த நாட்தானே"

(செ. மொத்தம்போல்—நறுவிலிக்குளம்)

"நித்திய நிறைவின் நிகரிலா நிதியில்
 நிறைவுற நிருமல ஒளியாய்
நிலையுற நினைவில் நிறைபெற நிறுத்தி
 நித்தியத் துணர்பரன் வடிவில்
சத்திய உருவாய்ச் சகலசம் பூர்ண
 சருவலங் காரண அருளாற்
சனித்திட வரமுஞ் சற்குண அருளுஞ்
 சந்திர வதனபுன் னகையும்
முத்திரை பதிந்த நித்திய ஒளியாய்
 முழுநவ மணிச்சுடர்ப் பிளம்பாய்
மோகன மோட்ச முடிவரு இன்பம்
 முக்கிளித் திருந்திடுந் தூயோர்
பத்தியிற் துலங்கப் பரகதி எழும்பப்
 பரவச அழகணி கற்பாய்ப்
பரனுயிர் மகளாய்ப் பத்தினித் தாயாய்ப்
 பக்குவம் பெற்ற நல்லமுதே"

●

"விண்ணினில் விளங்கும் வெண்மதி துலங்கும்
 மிதியடி பதிந்திட இலங்கும்
விண்ணொளி கலையாய் விடியுடு முடியாய்
 விண்டினில் மிதித்தெழு எழிலாய்
மண்ணினில் ரோசை மலர்மண மோனம்
 மதிப்புறுந் தேவநல் லருளாய்
மனிதருள் மணியாய் மாமணித் திருவாய்
 மனுமகன் மாசறு தாயாய்க்
கன்னினு ளொளியாய்க் கன்னிமை நிறைவாய்க்
 கற்பலங் காரண வரமாய்க்
கருதுசந் தானுள் கருவினி லுதித்துக்
 கான்முளைத் தவமணி யாகப்
பெண்ணினத் திலகம் பெயருறும் மரியை
 பெரும்புரட் டாதியெட் டாம்நாள்
பிறந்தஇந் நாளைப் பெருமித மகிழ்வாய்ப்
 பிரியமாய் அனுசரிப் போமே"

●

"கத்தனின் நினைவைக் கருணையின் வடிவைக்
 கண்டுளம் மகிழ்ந்தசந் தானள்
கருத்தினி லிருத்திக் கசடற நீக்கிக்
 கணவனின் சொற்றிறம் பாமை
உத்தமி யொழுகி ஒறுத்தறத் தவத்தா
 லுயிரிறை அருள்வளம் பெருக
உத்தம பண்பி லோங்கிய சாந்தி
 உருவுறக் கருவுறத் தானே
நித்தமும் செபமும் நித்திய நெறியும்
 நிலையதாய் ஒழுகிய போது
நித்திய கன்னி நிரம்பருட் சுனைம்
 நிறைவுற மகவதாய் வந்த
அத்தனி னன்னை அமலபொற் பன்னை
 அருட்புரட்டாதியெட் டாம்நாள்
அனைவருந் துதிக்கும் அமுதபொற் தினமே
 அன்னையின் பிறந்நாட் தானே."

✠

## விண்ணக வாழ்வின் 4-வது வருட நினைவு

"தயாரத்தின் சுவடிகள் கால வெள்ளத்தால் அழிக்கப்படினும், அன்பு நினைவெனும் ஏடுகள் ஒருக்காலும் அழிவதில்லை."

எங்களால் என்றும் மறக்க முடியாத என்நேசப் பத்தாவும், எங்கள் அன்புத் தந்தையுமாகிய திரு. எம். எஸ். பங்கிராஸ் அவர்கள் இறைவனடிசேர்ந்த 4-வது வருடம் 14-9-71-ல் பூர்த்தியாகிறது. இதைக்கண்ணுறும் அனைவரும் இவ்வாத்தும சாந்திக்காக வேண்டுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவி: றீற்றா பங்கிராஸ்
மக்கள்: ஜீவா, ரம்யா, ஜெயகர், புனிதா, பிரபாகர், அருணா.

Mr. Reeta Pankiras,
St. Anne's Church,
Kahawata. 98-71

## நன்றித் துதிகள்

குழந்தை யேசுவின் இரக்கத்தாலும், பற்பல புகழ்நாமம் பூண்ட பரி. தேவதாயாரினதும், அர்ச். சூசையப்பரினதும் வேண்டுதலினாலும் எனது குழந்தைக்கு ஏற்பட்ட சுகயீனம் விரைவில் குணமடைந்தது. இவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு இவர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்

* * *

கல்லறை ஆண்டவரின் இரக்கத்தால் நான் அவரிடம் கேட்டுக்கொண்ட மன்றாட்டு கிடைக்கப் பெற்றேன். அவரின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு அவரிடம் மன்னிப்புக் கேட்டுநிற்கிறேன்.

ஓர் அடியாள்.

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரி. தேவதாயார், சதா சகாயமாதா, காணிக்கைமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார் இவர்களிடம் நான்கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். இதை நேர்த்தியின்படி பிரசுரிக்கின்றேன்.

மிருசுவில் ஓர் அடியாள்

# மறை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள்

## புரட்டாசி 4-9-71—16-9-71

| திகதி | நேரம் | பாடம் | ஆசிரியர் |
|---|---|---|---|
| 4—9—71 | 3-30 | போதனை முறை | திரு. எஸ். எவ். சவுந்தரம் |
| ,, | 4-30 | திரு இசை | திரு. எம். யேசுதாசன் |
| 5—9—71 | 3-30 | சமூக இயல் | சிஸ்டர் கிரேசில்டா, அ. கா. |
| ,, | 4-30 | அப். இயக்கம் | திரு. சிப்பிரியன் |
| 11—9—71 | 3-30 | மனையியல் | சகோதரி ரேஸ், எவ். எம். எம். |
| ,, | 4-30 | உளவியல் விதிகள் | சகோதரி ரேஸ், எவ். எம். எம். |
| 12—9—71 | 3-30 | தேவதிரா. அநுமா. | வண. பிதா ஜி. ரி. பாலசுந்தரம், |
| ,, | 4-30 | இந்துசமயம் | திரு. ஆர். யோசவ் [அ. ம. தி. |
| 13—9—71 | 3-30 | கேள்விக் காட்சி மு. | பிறதர் அல்பிறட் |
| ,, | 4-30 | உளவியல் முறை | சிஸ்டர் ரேஸ், எவ். எம். எம். |
| 14—9—71 | 3-30 | கேள்விக் காட்சி மு. | பிறதர் அல்பிறெட் |
| ,, | 4-30 | உளவியல் முறை | சிஸ்டர் ரேஸ் |
| 15—9—71 | 3-30 | கேள்விக் காட்சி மு. | பிறதர் அல்பிறெட் |
| ,, | 4-30 | மனை. இல்லப் பொரு. | சிஸ்டர் ரேஸ் |
| 16—9—71 | 3-30 | கே. காட்சி. முறை. | பிறதர் அல்பிறெட் |
| ,, | 4-30 | மனையியல் இல். பொ. | சிஸ்டர் ரேஸ் |

"பங்குகொள்ளுங்கள், பயன்பெறுங்கள்"

**ஜி. ரி. பாலசுந்தரம், அ. ம. தி.**
யாழ். மாவட்ட மறைக்கல்வி ஆலோசகர்

# செய்திகள்

## அவசரகாலச் சட்டம்

"பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவசரகால நிலைமைச்சட்டம் மேலும் நீடிக்கச்செய்துவிடப் பட்டிருப்பதாக மகாதேசாதிபதி சென்ற 19ஆம் திகதி அறிவித்திருக்கின்றார்.

## ஆறு இன விதைநெல்

அடுத்த மகாபோககாலத்தின்போது விதைப்பதற்கென்று புதிய ஆறு இன விதை நெற்களை விவசாயிகளுக்கு வழங்கக் கமத்தொழிற் பகுதி முடிவு செய்துள்ளது. இவைகளை விதைப்பதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 100இல் இருந்து 125 புசல் நெல்வரை அறுவடை செய்யலாமென அறிவிக்கப்படுகிறது. இந்த நெற்களுடன் அது புதுவகை உரம் ஒன்றையும் அவர்களுக்கு வழங்கத் தீர்மானமாயிருக்கிறது.

## சைக்கினை காட்டும் விளக்குகள்

வடமராட்சிக் கரையோரப் பகுதியிலுள்ள குடத்தனை, நாகர்கோவில், தொண்டமானாறு ஆகியவிடங்களின் கரையிலே சைக்கினை காட்டும் விளக்குகள் அமைக்கப்படவிருக்கின்றன. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் சேமமாகக் கரை திரும்ப இவைகள் வழிகாட்டிகளாக அமையும்.

## 800 குடும்பங்களுக்கு நிலம்

குடியிருக்க நிலமற்றவர்களுக்குக் காணி கொடுக்கும் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே குடியிருக்கச் சொந்த நிலக்காணியில்லாத 800 குடும்பங்களுக்கு உடனடியாகக் காணிகள் வழங்கப்படவிருக்கின்றன. இவைகள் இன, மத, சாதி வேறுபாடின்றிக் குடியிருக்க காணியில்லாத சகலருக்குமே இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்படி எல்லாத் தொகுதிகளிலும் காணிகள் சுவீகரிக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் நான்குபரப்புக் காணி வழங்கப்படும்.

## சிறந்த விதை நெற்கள்

விவசாயப் பகுதியினர் தற்போது டிக்வி, பின்னிலெற் ஆகியசிறந்தவிதைநெல் இனங்களை இரண்டு ருத்தல் நெல்லும், அதற்கேற்ற பசளையும் சேர்த்துப் பைக்கெற்றுகளில் அடைத்துப் பைக்கெற் ஒன்று 2ரூபா 75சதவீதம் கமக்காரருக்கு விற்பனைசெய்து வருகின்றார்கள்.

## வெங்காயவிலை இறங்கியது

ஈரவெங்காயத்தின்விலை ஓர் இறாத்தல் 40 சதமாக விலையிறங்கி விட்டது. இதற்குக் காரணம் யாழ்ப்பாண மாவட்டத்திலே இம்முறை வெங்காயம் நன்றாகவிளைந்திருப்பதே. பொதுவிலே நாடுமுழுவதிலும் வெங்காயத்தைப் பெருமளவில் செய்கை பண்ணியதாலே அரசாங்கம்வெளிநாட்டுச் செலாவணியில் மூன்று கோடிரூபாமிச்சம்பிடித்திருக்கிறது.

## குடிசன மதிப்பு

1971ஆம் ஆண்டின் இலங்கைக் குடிசன மதிப்பு எடுக்கும் தினம் ஆடிமாதம் 27ஆம் திகதியாக முதலிலே குறிக்கப்பட்டிருந்தது. ஆனால், நாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாக அது பின்போடப்பட்டது. இப்பொழுது வருகிற ஐப்பசிமாதம் 9ஆம் திகதி நடைபெறுமென குறிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப குடிசனமதிப்பு புரட்டாசி மாதம் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை எடுக்கப்படும்.

## சிறுபோக நெல் விளைவு

கிளிநொச்சி, கரைச்சி, பாந்தன், முரசுமோட்டை ஆகிய பகுதிகளிலே இம்முறை சிறுபோக நெல்வேளாண்மை பெரிதும் பலனளிக்கக் கூடியவகையிலே அதிகம் நல்லவிளைவைத் தந்திருக்கிறது. கூட்டுறவுப் பகுதியினர் இப்பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்குப் பசளைகள், கிருமிநாசனிகள் ஆகியவைகளை வழங்கி சகல உதவிகளும் செய்துவருவதாகத் தெரியவருகிறது.

## மிளகாய்ச் செய்கையில் பொலிசார்

மிளகாய்ச் செய்கையில் பொதுமக்கள் மட்டுமல்ல, அரசாங்க ஊழியர்களும் ஈடுபட்டுவருகின்றார்கள். மதவாச்சிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் சகலரும் சேர்ந்து பொலிஸ் நிலையத்துக்கு முன்னுள்ள மூன்று ஏக்கர் காணியில் மிளகாய்ச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுப் பலருக்கும் ஓர் எடுத்துக்காட்டாய் இருந்துவருகிறார்கள்.

## எட்டுநாள் பரீட்சை

இதுவரை 21நாள் நீடித்து நடைபெற்றுவந்த கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சைகளை (ஜி. சி. ஈ) இவ்வருடம் மார்கழி மாதத்திலே எட்டுத்தினங்களில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி, பரீட்சைகளை நடத்துவதற்கு 2,500 மத்திய நிலையங்கள் தெரிவுசெய்யப்படவிருக்கின்றன. புதிய திட்டப்படி பரீட்சார்த்திகள் தினமும் நான்கு வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டிவரும். இதனால் பரீட்சைப்பகுதி பெருந்தொகையான நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்த முடியுமெனக் கூறப்படுகிறது.

## 25அடி நீளமானசுறா

அட்டாளைச்சேனை ஆழ்கடல் மீனவர்களின் வலையில் அகஸ்மாத்தாக ஓர் இராட்சத புள்ளிமான் சுறா அகப்பட்டது. 25அடி நீளமும், 10அடி சுற்றளவுமான இந்தச் சுறாவைக் கரைசேர்ப்பதில் அவர்கள் பட்டகஷ்டமோ இம்மட்டன்று. இந்தச் சுறா மீன்பிடி கூட்டுத் தாபனத்தினால் வாங்கப்பட்டுக் கொழும்புக்கு அனுப்பப்படலாற்று.

## எப்போது குடியரசாகும்?

புதிய அரசியல் அமைப்புத் திட்டம் இவ்வருட முடிவிற்குள் நிறைவேற்றப்பட விருக்கிறது. அதன்மேல் அடுத்த வருடம் இலங்கையின் சுதந்திர தினமாகிய மாசிமாதம் 4ஆம்திகதி அன்றேல் தமிழ்-சிங்கள புதுவருட தினமான சித்திரைமாதம் 14ஆம் திகதியாகிய இரண்டிலொன்றில் இலங்கை ஜனநாயக குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்படலாமெனத் தெரியவருகிறது. அன்றுதினம் குடியரசுச்சின்னமும், குடியரசுக்கொடியும் நாட்டுமக்களுக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்படும்.

## விவசாயிகளுக்கு வீடுகள்

குடியேற்ற திட்டங்களில் நல்லவீட்டு வசதியில்லாத விவசாயிகளுக்கு அரசாங்கம் நிரந்தரமான வீடுகளைக்கட்டிக் கொடுக்க 7கோடியே 20 லட்சம்ரூபா ஒதுக்கியிருக்கிறது. 1963ஆம் ஆண்டு முதல் பல்வேறு குடியேற்ற திட்டங்களிலுமுள்ள தற்காலிக வீடுகளில் வசிக்கும் விவசாயிகளுக்கு நிரந்தரமான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. இந்தக் குறையை நிவிர்த்தி செய்யுமாறே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 300 சதுர அடியில் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் 4,000 ரூபாவரை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஏற்றுமதி நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு வெங்காயம் ஏற்றியனுப்புவது நிறுத்தப்பட்டுள்ளது. இதுவரை தினமும் 4,000 அந்தர் வெங்காயம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால் கொழும்பிலே வெங்காயம் தேங்கிக் கிடப்பதாகவும், கட்டுப்பாட்டு விலையிலும் குறைந்த விலையிலே அங்கு அது கிடைக்கக்கூடியதாய் இருப்பதாலும் கூட்டுறவு விற்பனை ஸ்தாபனம் இங்கேவெங்காயம் கொள்வனவு செய்வதைக் கைவிட்டிருக்கிறது.

## பாடசாலைகளின் வேலைநேரம்

தினமும் பாடசாலைகளில் ஆறுமணித்தியாலம் கல்விகற்பிக்கப் படவேண்டுமென கல்வி அமைச்சு சகல பாடசாலைத் தலைவர்களையும் கேட்டுள்ளது. மேலும் பாடசாலைகளில் குறைந்தபட்சம் எட்டுப்பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்; ஒவ்வொருபாடத்திற்கும் 45நிமிடம் ஒதுக்கப்பட வேண்டும்; குறிப்பாக விஞ்ஞான, தொழில் நுட்ப பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள். பாடசாலைகளை ஆரம்பிக்கும் நேரத்தை அவர்களே தெரிவுசெய்துகொள்ள அனுமதியாயிருக்கிறது.

## பெற்றோல் கிணறுகள்

பெற்றோல்வள ஆராய்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டவேலைகள் அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன. இது விஷயமாய்ச் சோவியற்ருஷியாவுடன் விரைவிலே ஒரு உடன்படிக்கை செய்யப்படவிருக்கிறது. அதன்மேல் யாழ்ப்பாணம், மன்னார்க் கரையோரப்பகுதிகளிலே நிலப்பரப்பிற்கடியில் பெற்றோல் கிணறுகளைத் தோண்டி ஆராய்ச்சி நடத்தப்படும். இந்த வேலைகள் முடிவடைய 4 அல்லது 5 ஆண்டுகள் செல்லுமென்றும், அவற்றிற்கு ஒரு கோடி ரூபா செலவாகுமென்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

## புத்தகுரு கண்டிக்கிறார்

"இளைஞர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் நூல்கள்பல இப்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன; அண்மையில் ஏற்பட்ட புரட்சி இயக்கத்தில் இளைஞர்களை ஈடுபடச் செய்தவைகள் இவ்வித நூல்களே" என்று சங். கெண்பிட்டகெதற ஞானசிக தேரோ சென்ற 20ஆம் திகதியன்று இரத்தினபுரி வித்தியாலயம் ஒன்றின் பரிசளிப்பு விழாக் கூட்டத்தில் கண்டனஞ் செய்திருக்கிறார்.

## சீனிக்கு ரேஷன் இல்லை

சீனியைக் கூப்பன் ஒன்றுக்கு இரண்டு ருத்தல்வீதம் ரேஷன் அதாவது பங்கிடு செய்து வழங்க அரசாங்கம் ஆலோசித்திருப்பதாகப் பாராளுமன்றத்தில் ... பேசியபோது, அப்படியான திட்டம் எதையும் அரசாங்கம் இதுவரை செய்யவில்லையெனத் தெரிவித்திருக்கின்றார். மேலும் சீனியின் விலையைக்கூட்டும் நோக்கமோ அல்லது அதனை வழங்கும் முறையில் மாற்றஞ் செய்யும் எண்ணமோ இப்போது அரசாங்கத்துக்கு இல்லையென்றும் அவர் பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கின்றார்.

## ஆசிரியைகளின் இடமாற்றம்

ஆசிரிய தம்பதிகளாய் இருந்தோருள் பல ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்றுப் பிறமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டபொழுது அவர்களின் மனைவிமார் இடமாற்றம் செய்யப்படவில்லை. மற்றும் சில ஆசிரியைகளும் தங்கள் கணவன்மார் கடமைபார்க்கும் இடங்களுக்கு இடமாற்றஞ் செய்யப்படாதிருந்தார்கள். இந்த ஆசிரியைகள் தங்கள் கணவன்மார் பணியாற்றும் இடங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கான வழிவகையைச் செய்யக் கல்வி அமைச்சு சம்மதித்துள்ளது. அதனால் தங்கள் கணவன்மார் இருக்கும் இடங்களுக்கு இடமாற்றம் கோரும் ஆசிரியைகள் வருகிற புரட்டாசிமாதம் 1ஆம் திகதியிலிருந்து இடமாற்றம் வழங்கப்படவிருக்கிறார்கள்.

## புதிய காரியாதிகாரி பிரிவுகள்

நாட்டின் நிர்வாக புனரமைப்புத் திட்டத்தின்படி 110 புதிய காரியாதிகாரி பிரிவுகள் வகுக்கப்படவிருக்கின்றன. இதற்குக் காரணம், பல பிரிவுகள் மிகப்பெரியனவாய் இருப்பதே. ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவும் ஒவ்வொரு கூட்டுறவுப் பிரிவை அடக்கியதாயிருக்கும். அதன்மேல் சகலகாரியாதிகளும் உதவி அரசாங்க ஏசன்றர்களாய் இருப்பார்கள். அரசாங்க ஏசன்றர்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் இருந்துவரும்.

## ஒரு வகுப்பில் இருவருடம்

முதலாம் தரத்திலிருந்து ஒன்பதாம் தரம் வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கென்று அமைக்கப்பட்டுள்ள புதிய திட்டத்தின்படி, இந்த வகுப்புகளிலே கல்விபயிலும் மாணவன் அல்லது மாணவிகள் தாங்கள் படிக்கும் வகுப்பிலே இரு வருடங்களுக்கு மேல் இருக்கவிடப்படமாட்டார்கள். ஒரு வருடத்தில் வகுப்பேற்றப்படாதவர்களுக்கு இரண்டாம் வருடத்தில் விசேடமுறையில் கல்வி பயிற்றப்படும். அம்முறையும் பரீட்சையில் தவறினால் அவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

## 21,251 தொன் மிளகாய்

கடந்த இருமாதங்களில் மட்டும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரமாகிய மாவட்டங்களிலே மிளகாய் செய்கை பண்ணியவர்களிடமிருந்து 21,251 தொன் மிளகாயை விலைகொடுத்து வாங்கியுள்ளது. பொதுவிலே யாழ்ப்பாணம், அனுராதபுரம், அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, குருநாகல், மாத்தளை, மொனறகலை, வவுனியாவாகிய எட்டு மாவட்டங்களிலிருந்து அது வாங்கிய மிளகாய் 23,159 தொன். இதற்குக் கொடுபட்ட விலை 87,78,328 ரூபா. முழுத்தொகையிலும் ஆகக்கூடிய அளவு மிளகாய் யாழ்ப்பாண மாவட்டத்திலே வாங்கப்படலாயிற்று.

## தோட்டப் பாடசாலைகள்

தோட்டப் பாடசாலைகள் அடுத்தவருடத்திலே அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டதும் அவற்றிலே சிங்களம் இரண்டாவது பாடமாகக் கற்பிக்கப்படும். தற்போது தோட்டப் பாடசாலைகளில் 827 அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றிலே எட்டுப்பாடசாலைகளின் மொழி சிங்களமாகும். மீதியான 819பாடசாலைகளிலும் தமிழே போதனா மொழியாகும். இப்பாடசாலைகளில் 85,000 மாணவர்கள் படிக்கின்றார்கள். அவற்றிலே 1,26.. ஆசிரியர்கள் கல்விபயிற்றுகின்றார்கள். இவர்களில் தகுதியானவர்களே அரசாங்கத்தின்கீழ் ஆசிரியர்களாக நியமனஞ்செய்யப் படுவார்கள்.

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*சத்தியவேத பாதுகாவலன்*

# கத்தோலிக்க இலக்கியம்

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் மாதாகோயில் மணிகள் ஒலிக்க யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் முதல் நல்வாசனை ஞாயிறு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தொடர்ந்து பிரதி வருடமும் எழுத்து அப்போஸ்தலத்துவத்தின் முக்கியத்துவத்தை நல்வாசினை ஞாயிறு கத்தோலிக்க மக்களுக்கு எடுத்து உணர்த்தி வந்திருக்கிறது. கத்தோலிக்க இலக்கியங்களையும் பத்திரிகைகளையும் மக்களுக்கு விளம்பரப் படுத்தி அவர்கள் அவற்றை வாசிக்குமாறு தூண்டுவதற்கு இத்தினம் பயன்பட்டிருக்கிறது.

இலங்கை கல்வியறிவில் முன்னேற்றமுள்ள நாடாகக் கருதப்படுகிறது. ஏராளமான பத்திரிகைகள் நாள்தோறும் விற்பனையாவதைக் காண்கிறோம். சமீபகாலம்வரை பிற நாட்டு சஞ்சிகைகள் வீடுகள் தோறும் உலாவியதைக் கண்டோம். ஆனால், கத்தோலிக்க நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் எவ்வளவுக்கு விலைப்படுகின்றன? கத்தோலிக்க நூல்களை வாசிப்பதை வழக்கமாகக் கொள்வோர் எத்தனை பேர்? குருக்கள், கன்னியர்களும், விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரும்தான் என்று கூறலாம். கத்தோலிக்க பத்திரிகைகளை வாங்குவோர் தொகை இதைவிடச் சிறிது அதிகமாக இருக்கலாம். கத்தோலிக்க மக்கள் தொகை ஏராளமாக இருக்கும்போது விற்பனையாகும் இலக்கியத்தின் தொகை ஏன் இவ்வளவு குறைவாக இருக்க வேண்டும்? அதுவும் திருச்சபையின் முறைகளிலும் கருத்துக்களிலும் புதுப்புது மாற்றங்கள் நிகழ்ந்துவரும்போது, கத்தோலிக்க எழுத்தாளர் முன்னெப்போதுமில்லாத சுதந்தரத்தோடு பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிடும்போது? மக்களுக்கு கத்தோலிக்க இலக்கியங்கள் சுவைப்படவில்லை. ஏதோ கடமைக்காக வாசிக்கிறார்கள்.

மக்கள் ஆதரவு இல்லாவிட்டால் எந்தப் பத்திரிகையோ நூலோ வெளிவர முடியாது. கத்தோலிக்க வெளியீடுகள் வியாபார நோக்குடன் நடத்தப்படுவன அல்ல. அப்போஸ்தலத்துவம்தான் அவற்றின் முக்கிய நோக்கம். ஆனால், ஒரு பிரசுரம் தொடர்ந்து நட்டத்தில் வெளிவந்து கொண்டிருக்கவும் முடியாது.

ஆகவே, கத்தோலிக்க இலக்கியங்களை ஊக்குவிக்க வேண்டுமென்பது தெளிவு. கத்தோலிக்கரிடையே சிறந்த எழுத்தாளர் இல்லையென்று கூறமுடியாது. கத்தோலிக்க நூலொன்றுக்கு சாகித்திய மண்டலப்பரிசு கிடைத்ததென்றால் அது போன்ற தரமான நூல்கள் அநேகம் வெளிவரலாம் அல்லவா? இலங்கையில் பாஷைக்கொரு கத்தோலிக்க பத்திரிகை என்ற நிலைமாறி, பல பத்திரிகைகள் வெளிவந்து அறிவுச்சுடர் கொளுத்தும் நாள் எந்நாளோ? இன்றைய கருத்துக்களையும், நாட்டின் தேவைகளையும், மக்கள் மனோநிலையையும் அனுசரித்து புதுப்புது இலக்கியங்கள் தோன்ற வேண்டும். விசேஷமாகச் சிறுவருக்கும், இளைஞருக்கும் பொருத்தமான கத்தோலிக்க இலக்கியங்கள் தமிழில் அரிதாக இருக்கின்றன.

வாசகர்கள் ஆதரவின்றி இலக்கியம் வளர முடியாது. எவ்வளவுக்கு வாசகர் ஆதரவு அளிக்கிறார்களோ அவ்வளவுக்கு இலக்கியம் வளர்ச்சியடையும், அதன் தரமும் உயரும். ஆனால், சமய நூல்கள் இலௌகிக இலக்கியங்களைப் போல் கவர்ச்சியாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால் அவற்றோடு இவற்றை ஒப்பிடுவது பொருந்தாது. ஆனால், கத்தோலிக்க எழுத்தாளர்களுக்கு இது ஓர் அறைகூவல், தமது மகத்தான பணியை மக்கள் கண்களுக்கு கவர்ச்சிகரமாகத் தோன்றச் செய்யவேண்டும்.

விளம்பரம இன்று மக்கள் வாழ்வை ஆள்கின்றது. கத்தோலிக்க இலக்கியத்தையும் புதுப்புது முறைகளில் விளம்பரம் செய்தால் மக்களை விசேஷமாக இளைஞரை கவரலாமல்லவா?

---

மணல் ஒன்றோடொன்று ஒட்டி இறுகி மலையாகிறது. இயற்கையில் ஓயாது நிகழ்ந்துவரும் நிகழ்ச்சியின் பயன் இது. இங்ஙனம் எண்ணத்தின் தொகை மனிதன். எண்ணத்தை நல்லதாக்கிவிட்டால் மனிதனும் நல்லவனாகிறான். மற்று, எண்ணத்தைக் கெடுத்துவிட்டால் மனிதன் தானே கெட்டவனாகிறான். விரைவில் ஒருவன் கெட்டுப்போய் விடலாம். ஆனால், நல்லவனாவதோ மலையின் வளர்ச்சி போன்று நெடுநாள் ஆகிறது.

'திருக்குறள்'

# மறைந்த தொழிலாளிக்கு அஞ்சலி

சுதந்திர அயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டப்ளின்நகரின்புறவீதிகளில் ஒன்றிலே இற்றைக்கு 46 வருடங்களின்முன் இறந்து கிடக்கக் காணப்பட்ட அந்நகர வறியதொழிலாளி ஒருவருக்கு அங்குள்ள இளாஸ்னேவின் சேமக்காலையில் சென்ற ஆனிமாதம் சூரியன் நன்கு பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு ஞாயிற்றுக் கிழமை அந்நகர் வாசிகளான ஆயிரவர் குழுமியிருந்து அஞ்சலி செய்து நின்றார்கள். அவருடைய உடல் அச்சேமக்காலையின் 69-வது கிலவறையிலே இருந்து வருகிறது.

இந்த மனிதர் தேவதொண்டரான மற்தல்போத் என்பவரே. நோயினால் நலிந்து வாடியதாலும், தானாகவே தனக்குக் கடின உபவாசங்கள், தண்டனைகளை விதித்துத் தன்னைத் தண்டித்து வந்தமையாலும் திவ்விய பூசை காணப்போகும் வழியிலே சோர்வுற்று விழுந்து மரணமடைந்தபோது இவருக்கு வயது 69.

இவர் இரமமாக உபவாசஞ்செய்து வந்தார். சங்கிலிகளை அணிந்து தனது சரீரத்தைத் தபசினால் வாட்டினார். தனது வாழ்க்கையின் ஆரம்பத்திலே இவர் மதுபானம் அருந்தப் பழகிப் பெரும் குடிகாரனானார். சில தருணங்களிலே மதுபானத்திற்குப் பணம் தட்டுப்பட்டபோது இவர் தனது சப்பாத்துகளைத் தானும் விற்றார். ஆனால், இவர் 28வயதுடையவராய் இருக்கையில் மூன்றுமாதகாலத்துக்கு மதுபானம் அருந்துவதில்லையென்று உறுதிசெய்தார். தான் செய்துகொண்ட உறுதியில் நிலைத்திருப்பது சந்தேகமென்று தன்னைத்தானே அப்பொழுது நம்பமுடியாதவரானார். ஆனால், மூன்று மாதங்கள் சென்றபின் அந்த உறுதியைச் சீவியகால முழுவதும் செய்துகொண்டார்.

செபத்திலே அநேகமணித்தியாலங்கள் செலவிட்டார். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணை ஆரம்பமாயிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## உறுதிப்பூசுதல் வயது உயர்த்தப்படுமா?

தற்போது, பொதுவாக 'முதல் நன்மை' பெறுகிறபோதே அல்லது அதே பருவத்தில் 7வயதுக் குழந்தைகளுக்கு உறுதிப் பூசுதலும் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், உறுதிப்பூசுதல் அளிக்கப்படும் வயதை உயர்த்துவதற்கு ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன—உறுதிப்பூசுதல் பெறும் பொழுது அதைப் பெறுபவர் சற்று அறிவில் முதிர்ந்தவராக இருப்பது நன்று என்று மறைவல்லுனர் பரிசுத்த தந்தைக்கு ஆலோசனை கொடுத்திருக்கின்றனர்—இது பற்றி பரிசுத்ததந்தை தானே தமது கோடைக்கால வாசஸ்தலத்தில் அளித்த ஒருபேட்டியில் அண்மையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## ஆருயிரைத் தியாகஞ்செய்த போலிஷ் குருவானவர்

புனிதர்களைப்பற்றிய விசாரணைகளை நடாத்துகின்ற திருச்சங்கம் சென்ற ஆனிமாத நடுப்பகுதியிலே பாப்பரசரின் சமுகத்திலே வத்திக்கானில் கூடியபோது, ஆசீ. மைக்சிமிலியன் கொல்பி சுவாமிகளுக்கு முத்திப்பேறு பட்டம் அருளுவதற்கென்று அவர் சலுகையால் நடைபெற்றதாக எடுத்தாளப்பட்ட இரு அற்புத ஆரோக்கியங்களும் அங்கீகரிக்கப்பட்டன. ஒரு போலிஷ்காரரான கொல்பி சுவாமிகள் 1941ஆம் ஆண்டு ஒஸ்ச்விற்ஸ் எனும் இடத்திலிருந்த நாஸியகொலைமுகாமில் இருந்த தமது உடன் கைதி ஒருவருக்காக—ஒரு பாரிய குடும்பஸ்தரான உடன் கைதி ஒருவருக்காகத் தம்மைப் பிணையாக்கித் தம்முடைய ஆருயிரைத் தியாகஞ் செய்யலானார்.

## திரும்பவும் கத்தோலிக்க கோவில்

இங்கிலாந்திலே மால்ரன் நகரில் 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதும், சமீபகாலம்வரை ஓர் அங்கிளிக்கன்சபைக்குரியதாய் இருந்து வந்ததுமான புனித லெயோனட்டின் கோவில் இப்பொழுது திரும்பவும் ஒரு கத்தோலிக்க கோவிலாக மாறியிருக்கிறது. இந்தக்கோவில் அங்கிளிக்கன் சபையின் தேவைகளுக்கு மேலதிகமாக இருந்தமையாலே அங்குள்ள புனிதமரியாயின் விசாரணைப் பங்குக்குக் கொடுபட்டுள்ளது. அங்கிளிக்கன்சபைக் கவுண்சிலின் விசேட உத்தரவின் பேரிலே அது இலவசமாக வழங்கப்படலாயிற்று. இது கிறிஸ்த ஐக்கியத்துக்கு ஒரு மகத்தான அறிகுறியென்று அவ்விசாரணைப் பங்குக்குருவான வண. மிக்கேல் பொயிட் சுவாமியார் கூறுகிறார்.


## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை புங்கங்குளம் றோட்டிடல் அந்தோனியார் கோவிலுக்கு அண்மையில் உள்ள 16 பரப்புக்காணி, 8அல்லது 3 பரப்புத் துண்டுகளாக விற்கப்படும்.

விபரங்களுக்கு:

சாண்ட் ரிரேறட்ஸ்
35, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


உண்மை, தூய்மை, சுயநலமின்மை இம்மூன்றும் எவரிடத்தில் உளதோ, அவரை அழிக்க எவராலும் இயலாது.

—சுவாமி விவேகானந்தர்

## பூசை வழிகாட்டி

### புரட்டாதி — 1971

5. ஞாயிறு — ஆண்டின் 23-ம் ஞாயிறு [ப]
   1-ம் வாசகம்: ஞானா. 9: 13—18
   2-ம் வாசகம்: பிலமோன் 9: 10, 12—17
   சுவிசேஷம்: லூக். 14: 25—33

6. திங்கள் — நாள் பூசை [ப]
   வாசகம்: கொலோ. 1: 24—2, 3
   சுவிசேஷம்: லூக். 6: 6—11

7. செவ்வாய் — நாள்பூசை [ப]
   வாசகம்: கொலோ. 2: 6—15
   சுவிசேஷம்: லூக். 6: 12—19

8. புதன் — புனித கன்னிமரியின் பிறப்பு [வெ]
   வாசகம்: மிக். 5: 2—5
   சுவிசேஷம்: மத். 1: 1—16, 18—23

9. வியாழன் — நாள் பூசை [ப]
   வாசகம்: கொலோ. 3: 12—17
   சுவிசேஷம்: லூக். 6: 27—38

10. வெள்ளி — நாள்பூசை [ப]
   வாசகம்: 1திமோ. 1: 1—2, 12—14
   சுவிசேஷம்: லூக். 6: 39—42

11. சனி — நாள் பூசை [ப]
   வாசகம்: 1திமோ. 1: 15—17
   சுவிசேஷம்: லூக். 6: 43—49

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 4-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்." யாழ்ப்பாணம். தொலைபேசி: 500. தாபிதம்: 1876.